மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** போல கடகடவென்று பேசினார் என்றுதான் சொன்னாரே தவிர, கொச்சைப்படுத்துகின்ற வார்த்தை அதில் ஒன்றும் வரவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அதுகுறித்து ஐயப்பாடு தெரிவித்திருக்கின்றார். அவருடைய மனம் புண்படும்படியாக இருந்தால் அந்த வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கத்தை அளித்துள்ளார்கள். அவருடைய விளக்கத்தை ஏற்று அந்த ** என்ற சொல் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

அடுத்து வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

சுற்றுலாத் தலம்

*463—**திரு. ப. மோகன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளுக்கு ஏற்கெனவே ரூ.60.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் ரூ.38.45 இலட்சம் மதிப்பீட்டில் கரியாலூர் ஏரி மேம்பாட்டுப் பணிகள், ரூ.5.55 இலட்சம் மதிப்பீட்டில் பெரியாறு அருவிப் பகுதி மேம்பாட்டுப் பணிகள், ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் தாழ்வெள்ளி மலையில் சுற்றுச்சூழல் மற்றும் கருத்து

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2012 ஜனவரி 31]

விளக்க மைய மேம்பாட்டுப் பணிகள் ஆகியவை ஏற்கெனவே முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.*

திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலைப்பகுதி, சுற்றுலா வளர்ச்சியில் மேம்பாடு அடைய வேண்டும் என்கின்ற ஒரு நல்ல நோக்கத்தில் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1984 இல் கோடை விழாவை கல்வராயன் மலையில் துவக்கினார்கள். அதற்குப் பின்னால் இடையிலே நிறுத்தப்பட்டு மீண்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வந்ததற்குப் பின்னால் அங்கே கோடை விழா தொடங்கப்பட்டது. அந்தக் கல்வராயன் மலைப் பகுதி சுற்றுலாத் தலமாக உயர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகள் எல்லாம் வைக்கப்பட்டு, கோமுகி அணையைச் சுற்றிப் பூங்காவை அமைப்பதுடன், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்மூலம் சுற்றுலாத் துறையின் மூலம் மேம்பாடு அடையச் செய்வதற்காக, நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையிலே, சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலையில் மேம்பாட்டை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இதய தெய்வம் புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, கல்வராயன் மலைப் பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் 20, 21 ஆம் தேதிகளில் சுற்றுலாத் துறை மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மிக நல்ல முறையில் அங்கே விழா கொண்டாடப்பட்டது. அதைப்*

போலவே, கடந்த 3–11–2011 ஆம் தேதி அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக கல்வராயன் மலைப் பகுதியிலுள்ள ஏற்கெனவே பராமரிக்கப்படாத நிலையிலுள்ள பூங்காவைச் சீரமைத்து, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் அங்கே வைக்கப்படவேண்டும் என்றும், விளக்குகள் அங்கே அமைக்கப்பட வேண்டும் என்றும், பல்வேறு வளர்ச்சிப் பணிகள் அங்கே அமைக்கப்படவேண்டும் என்றும், புதியதாக Boat வசதி அங்கே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை வைத்து, ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று இங்கே சுற்றுலாத் துறைக்கு கருத்துரு அனுப்பியுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி, இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆசியோடு அது ஆய்வு செய்யப்பட்டு நிச்சயமாக அந்தப் பகுதியிலே சுற்றுலாப் பயணிகள் வந்து மகிழ்வுறும் வகையில் மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படும் என்பதைப் பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. மோகன் அவர்கள்.

திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்களுடைய அரசு, அதைச் செய்வதற்கான முன்முயற்சி எடுப்பதற்காக அந்தப் பகுதிவாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

8—

தரம் உயர்த்துதல்

***5709—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—